**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC.15/2023
Prosecution witness.02

| | |
|---|---|
| பெயர் : முருகேசன் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10th day of July 2023.

10.07.2023

(எதிரி ஆஜர்).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். சுமார் ஒரு வருடங்களுக்கு முன்பாக 8ம் மாதம் 28ம் தேதி ராஜா, இவ்வழக்கில் விபத்தில் அடிபட்டு இறந்துபோன மணிமாறன் மற்றும் நான், கூரிசாஸ்தா கோவிலுக்கு சாமி கும்பிடுவதற்காக சென்றோம். நானும், ராஜாவும் கோவிலில் இருந்தபோது எங்களுக்கு முன்னால் 1/2 மணிநேரத்திற்கு முன்பாக மணிமாறன் கிளம்பி சென்றுவிட்டார். நாங்கள் 1/2 மணிநேரம் கழித்து வந்தபோது மீசலுக்கும் உலையூருக்கும் இடையில் கூட்டமாக இருந்தார்கள். என்னவென்று கேட்டபோது விபத்து நடந்ததாக கூறினார்கள்.

2) நாங்கள் அருகில் சென்று பார்த்தபோது மணிமாறன் தான் அடிபட்டு கிடந்தார். நாங்கள் மணிமாறனை தூக்கி பார்த்தபோது அவர் இறந்துவிட்டார். அவரது மனைவிக்கு என்னுடன் வந்த ராஜா உடனடியாக போன் செய்து தகவலை கூறினார். போலிசார் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**நீதிமன்ற கேள்வி:** இவ்வாறு தான் சாட்சியம் அளிக்கவேண்டும் என்று யாரும்

கட்டாயமோ, மிரட்டலோ, தூண்டுதலோ விடுத்தார்களா என்றால் இல்லை.

(சாட்சி அரசு தரப்பிற்கு விரோதமாக சாட்சியம் அளித்ததால் அவரை பிறழ்சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யபடுகிறார்).

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) கடந்த 28.08.2022ம் தேதி மதியம் சுமார் 01.30 மணியளவில் நான், ராஜா மற்றும் இவ்வழக்கில் இறந்துபோன மணிமாறன் ஆகியோர் கோவிலுக்கு சென்றுவிட்டு அவரவர் இருசக்கர வாகனத்தில் ஒன்றாக திரும்பி வந்தபோது இவ்வழக்கின் எதிரி TN 63 N 1469 என்ற 14ம் நம்பர் அரசு டவுன்பேருந்தை அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஒட்டி வந்து மணிமாறனின் இருசக்கர வாகனத்தில் மோதியதை நான் நேரடியாக பார்த்தேன் என்று சொன்னால் சரியல்ல.

2) விபத்தை நேரடியாக பார்த்ததாக கீழத்தூவல் போலிசாரிடம் வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். விபத்து யாருடைய கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் ஏற்பட்டது என்று என்னால் கூறமுடியாது என்று சொன்னால் சரிதான். விபத்து நடந்ததாக சொல்லப்படும் சாலை அதிக வாகனங்கள் செல்லக்கூடிய சாலை என்று சொன்னால் சரிதான்.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC.15/2023
Prosecution witness.03

| | |
|---|---|
| பெயர் : வீரராஜா | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10th day of July 2023.

10.07.2023

(எதிரி ஆஜர்).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் கடை வைத்துள்ளேன். சென்ற வருடம் ஆகஸ்ட் மாதம் 28ம் தேதி நான், எனது அண்ணன் அசா.2 முருகேசன் மற்றும் மணிமாறன் ஆகியோர் ராமநாதபுரத்தில் உள்ள கூரிசாஸ்தா கோவிலுக்கு சாமி கும்பிடுவதற்காக சென்றோம். நானும், அசா.2ம் கோவிலில் இருந்தபோது மணிமாறன் அவருக்கு ஏதோ அவசரவேலை இருப்பதாக கூறி எங்களுக்கு முன்னால் கிளம்பி சென்றுவிட்டார். நானும், அசா.2ம் 1/2 மணிநேரம் கழித்து வந்தபோது மீசலுக்கும் உலையூருக்கும் இடையில் கூட்டமாக இருந்தார்கள். என்னவென்று பார்த்தபோது விபத்து நடந்து இருந்தது.

2) நாங்கள் அருகில் சென்று பார்த்தபோது மணிமாறன் தான் அடிபட்டு கிடந்தார். அருகில் டவுன்பஸ் ஒன்று நின்றுகொண்டிருந்தது. நாங்கள் மணிமாறனை தூக்கி பார்த்தபோது அவர் இறந்துவிட்டார். உடனே நான் மணிமாறனின் மனைவிக்கு போன் செய்து தகவலை கூறினேன். போலிசார் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**நீதிமன்ற கேள்வி:** இவ்வாறு தான் சாட்சியம் அளிக்கவேண்டும் என்று யாரும் கட்டாயமோ, மிரட்டலோ, தூண்டுதலோ விடுத்தார்களா என்றால் இல்லை.

(சாட்சி அரசு தரப்பிற்கு விரோதமாக சாட்சியம் அளித்ததால் அவரை பிறழ்சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யபடுகிறார்).

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) கடந்த 28.08.2022 ம் தேதி மதியம் சுமார் 01.30 மணியளவில் நான், அசா.2 மற்றும் இவ்வழக்கில் இறந்துபோன மணிமாறன் ஆகியோர் கோவிலுக்கு சென்றுவிட்டு அவரவர் இருசக்கர வாகனத்தில் ஒன்றாக திரும்பி வந்தபோது இவ்வழக்கின் எதிரி TN 63 N 1469 என்ற 14 ம் நம்பர் அரசு டவுன்பேருந்தை அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து மணிமாறனின் இருசக்கர வாகனத்தில் மோதியதை நான் நேரடியாக பார்த்தேன் என்று சொன்னால் சரியல்ல.

2) விபத்தை நேரடியாக பார்த்ததாக கீழத்தூவல் போலிசாரிடம் வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். விபத்து நடந்ததாக சொல்லப்படும் சாலை அதிக வாகனங்கள் செல்லக்கூடிய சாலை என்று சொன்னால் சரியல்ல. விபத்து இழப்பீடு பெறுவதற்காக எதிரி மீது பொய்யாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது.